**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 36/2017 மற்றும் 13/2022 கூட்டு விசாரணை வழக்கு | பி.வா.சா. | : 1 |
| பெயர் | : ராஜா | த/பெ. | : முத்து |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : பொய்யாம்பட்டி |
| தேதி | : 02.02.2024 | வயது | : 50 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 03.46 P.M. – 03.58 P.M.

**அசல் வழக்கு 36/2017 ன் பிரதிவாதிகள் மற்றும் 13/2022 வழக்கின் வாதிகள் தரப்பில் முதல் விசாரணை:**

1) நான் அ .வ.எண்.36/2017 ம் வழக்கின் 4 ம் பிரதிவாதி ஆவேன் . மேற்படி வழக்கை ஆறுமுகம்செட்டியார் வகையரா தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கின் விவரங்கள் எனக்குத் தெரியும் . நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்த காண்பித்த பிறகு நான் அதில் கையெழுத்து செய்தேன் . எனது, பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை அ .வ.எண்.36/2017 வழக்கின் பிரதிவாதிகள் தரப்பின் சாட்சியமாக ஏற்றுக்கொண்டு , அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

பி.வா.சா.ஆ.1 – 22.07.2016 தேதியிட்ட 4 ம் பிரதிவாதி திண்டுக்கல் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய புகார் மனு கை நகல்.

பி.வா.சா.ஆ.2 – 22.07.2016 தேதியிட்ட 4 ம் பிரதிவாதி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு கை நகல்.

பி.வா.சா.ஆ.3 – 22.07.2016 தேதியிட்ட 4 ம் பிரதிவாதி திண்டுக்கல்

மாவட்ட மனித உரிமைகள் கழகத்திற்கு அனுப்பிய புகார் மனு கை நகல்.

பி.வா.சா.ஆ.4 – 10.05.2003, 21.04.2023 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிஸ்து இரசீதுகள் அசல்.

பி.வா.சா.ஆ.5 – 13.10.2015 தேதியிட்ட 1416 பசலி ஆண்டிற்கான 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள அடங்கல் உண்மை நகல்.

பி.வா.சா.ஆ.6 – 03.10.2017 தேதியிட்ட புல எண் 351/1 க்கான அ பதிவேடு இணைய நகல்.

பி.வா.சா.ஆ.7 – 10.03.2017 தேதியிட்ட பட்டா – இணைய நகல்(பட்டா எண்.1841)

பி.வா.சா.ஆ.8 – 09.03.2018 தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRL.OP (MD) No.2875 of 2018 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட உத்தரவு – இணையநகல்.

பி.வா.சா.ஆ.9 – 18.04.2022 தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRP (PD) (MD) No.868 of 2022 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட உத்தரவு – சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.10 – 13.06.2022 தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRL.OP (MD) No.10378 of 2022 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட உத்தரவு – சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.11 – 08.07.2022 தேதியிட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRL.OP (MD) No.11499 of 2022 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட உத்தரவு மற்றும் அதன் பேரில் நீதிமன்றத்தில் ரூ.25,000/– பிணையத்தொகை செலுத்தப்பட்டதற்கான இரசீது – அசல்.

பி.வா.சா.ஆ.12 – 22.03.2023 தேதியிட்ட நத்தம் காவல் நிலைய குற்ற எண்.116/2023 ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை – இணைய நகல்.

பி.வா.சா.ஆ.13 – 23.11.2020 தேதியிட்ட 4ம் பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பிய மனு – கை நகல்.

மேற்கண்ட ஆவணங்களை பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.13 வரை குறியீடு செய்யப்படுகிறது. கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 02.02.2024 கையெழுத்து செய்துள்ளார்.

V UDAYA SURIYA

Digitally signed by V UDAYA SURIYA
Date: 2024.02.02 21:08:10 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்